**இந்தோ-அமெரிக்கன் கல்லூரி**, செய்யாறு.

**தமிழ்த்துறை – இரண்டாம் ஆண்டு**

**பாடக்குறிப்புகள் (Nov/Dec 2020)**

**அலகு** – 1

**திருக்குறள்**

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் முதலாவதாக வைத்துப் போற்றக்கூடிய நூல் திருக்குறள். இதன் ஆசிரியர் திருவள்ளுவர். இது அறத்துப்பால்-38 அதிகாரம், பொருட்பால்-70 அதிகாரம், இன்பத்துப்பால்-25 அதிகாரம் என மூன்று பால்களில் 133 அதிகாரங்களைப் பெற்று அதிகாரத்திற்கு பத்து குறட்பாக்கள் வீதம் 1330 குறட்பாக்கள் பெற்றுள்ளது.

அறத்துப்பால் – பாயிரவியல் (4), இல்லறவியல் (20), துறவறவியல் (13), ஊழியல் (1)

பொருட்பால் – அரசியல் (25), அங்கவியல் (32), குடியியல் (13)

இன்பத்துப்பால் – களவியல் (7), கற்பியல் (18)

என ஒன்பது இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதற்கு உத்திரவேதம், தெய்வநூல், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ்மறை, பொதுமறை என்ற வேறு பெயர்களும் உண்டு. “ வள்ளுவன் தன்னை உலகினுக் கேதந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு” எனறு பாரதியார் இந்நூலினைப் புகழ்ந்துள்ளார். ‘ திருவள்ளுவமாலை' என்ற நூல் திருக்குறளின் சிறப்பை உணர்த்துகிறது. மேலும் திருக்குறள் உலகப்பொதுமறை என அனைவராலும் அழைக்கப்படுகிறது.

**திருவள்ளுர்**

வள்ளுவர் கி.மு.31இல் பிறந்தார் எனக் கூறி வள்ளுவராண்டைக் கணக்கிடச் செய்தார் மறைமலையடிகள். வள்ளுவர் மயிலாப்பூரில் பிறந்தார் என்றும் வாசுகி என்ற பெண்ணை மணந்தார் என்றும் கூறுவர். இவர் நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப்புலவர், நான்முகன், மாதாநுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர், பொய்யில்புலவர் என்ற வேறுபெயர்களாலும் அழைக்கப்படுகிறார்.

**உரைகள்**

தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிமேலழகர், பரிதி, திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காளிங்கர் என்ற பத்துப்பேரும் முதலில் உரைகண்டவர்கள். இதில் பரிமேலழகர் உரையே சிறந்தது என்று போற்றப்படுகிறது. மேலும் மணக்குடவர், பரிமேலழகர், பரிதி, பரிப்பெருமாள், காளிங்கர் என்ற ஐவரின் உரை மட்டுமே கிடைத்துள்ளது.

**மொழிபெயர்ப்பு**

திருக்குறளை அறிஞர்கள் பல்வேறு மொழிகளில் மொழிப் பெயர்த்துள்ளனர். அவற்றுள்

இலத்தீன் – வீரமாமுனிவர்

ஜெர்மன் – கிரால்

ஆங்கிலம் – ஜி.யூ.போப்

பிரெஞ்சு – ஏரியல்

வடமொழி - அப்பா தீட்சதர்

இந்தி – பி.டி.ஜெயின்

தெலுங்கு – வைத்தியநாதநாதா

மலையாளம் – கோவிந்தம் பிள்ளை

போன்றோர் திருக்குறளை மொழிப் பெயர்த்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

**I. மக்கட்பேறு**

1. பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவு அறிந்த
   மக்கட்பேறு அல்ல பிற.

ஒருவன் பெறத்தகுந்த செல்வங்களுள், அறிய வேண்டியவற்றை அறிந்த அறிவுடைய பிள்ளைகளைப் பெறுவதைத் தவிர மற்ற செல்வங்களை நாம் மதிப்பது இல்லை.

2. எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
   பண்புடை மக்கட் பெறின்.

பிறரால் பழிக்கப்படாத பண்புடைய நல்ல பிள்ளைகளைப் பெறுபவனுக்கு, ஏழு பிறவிகளிலும் துன்பங்கள் வந்து சேராது.

3. தம்பொருள் என்ப தம்மக்கள்; அவர்பொருள்
   தம்தம் வினையான் வரும்.

தம் பிள்ளைகளே தம்முடைய பொருள் என்று சான்றோர் கூறுவர்; அப்பொருள் அவரவர் செய்யும் செயல்களால் வந்து சேரும்.

4. அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள்
   சிறுகை அளாவிய கூழ்.

தம் பிள்ளை தன் சிறிய கைகளால் பிசைந்து வைத்த உணவு, பெற்றோர்க்கு அமிழ்தத்தை விட மிகுந்த சுவையுடையதாகும்.

5. மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
   சொற்கேட்டல் இன்பம் செவிக்கு.

தாம் பெற்ற பிள்ளைகளைத் தொட்டு அணைப்பது, உடலுக்கு இன்பத்தை தரும்; அவர்கள் பேசும் மழலைச் சொற்களைக் கேட்பது செவிக்கு இன்பம் தரும்.

6. குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
   மழலைச்சொல் கேளா தவர்.

தான் பெற்ற குழந்தையின் மழலைச் சொற்களைக் கேட்டு அறியாதவர்கள், ‘குழல் இசை இனிது! யாழ் இசை இனிது' என்று கூறுவர்.

7. தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
   முந்தி இருப்பச் செயல்.

தந்தை தன் மகனுக்கு செய்யும் நன்மை என்பது கற்றோர் கூடிய அவையில் அவனை முதன்மை பெறுமாறு செய்தலாகும்.

8. தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது.

தன் பிள்ளையின் அறிவுத்தன்மை, தமக்கு இன்பத்தை அளிப்பதை விட பெரிய உலகத்தில் உள்ள உயிர்களுக்கெல்லாம் இன்பம் தரும்.

9. ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

ஒரு தாய் தன் மகனைப் பெற்றெடுக்கும் போது அடையும் இன்பத்தை விட உலகமக்கள் அவனைச் ‘ சான்றோன்’ எனக் கூறும் போது அதைக்கேட்டு பன்மடங்கு இன்பம் கொள்கிறாள்.

10. மகன் தந்தைகாற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல் எனும்சொல்.

மகன் தந்தைக்குச் செய்யும் உதவி ‘ இவனை மகனாகப் பெற்றமைக்கு இவன் தந்தை என்ன தவம் செய்தானோ?’ என்று பிறர் கூறுமாறு செய்வது தான்.

**II. விருந்தோம்பல்**

1. இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி

வேளாண்மை செய்தற் பொருட்டு.

வீட்டில் மனைவியோடு இருந்து பொருள்களைக் காத்து வாழ்வது எல்லாம் விருந்தினரைப் போற்றி அவர்களுக்கு உதவி செய்வதற்கே ஆகும்.

2. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா

மருந்தெனினும் வேண்டாற்பாற் றன்று.

விருந்தினரை வீட்டில் ஒரு புறத்தே இருக்க வைத்து தான் மட்டும் தனித்து உண்பது அமிழ்தமாக இருந்தாலும் அது விரும்பத்தக்கது அன்று.

3. வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை

பருவந்து பாழ்படுதல் இன்று.

தன்னிடம் வந்த விருந்தினரை நாள்தோறும் உபசரிப்பவனது வாழ்க்கை, வறுமையால் வருந்திக் கெடுவது இல்லை.

4. அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து

நல்விருந்து ஓம்புவான் இல்.

தகுந்த விருந்தினரை முகம் மலர்ந்து உபசரிப்பவனது வீட்டில் திருமகள் மனம் மகிழ்ந்து வாழ்வாள்.

5. வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி

மிச்சில் மிசைவான் புலம்.

விருந்தினரை முதலில் உபசரித்து, பின்பு மிஞ்சிய உணவைத் தான் உண்ணும் இயல்பு உடையவனது நிலத்துக்கு விதையும் விதைக்க வேண்டுமோ?.

6. செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்

நல்வருந்து வானத் தவர்க்கு.

வந்த விருந்தினரை உபசரித்து, இனி வரப்போகும் விருந்தினரை எதிர்பார்த்திருப்பவன், வானத்தில் உள்ள தேவர்களுக்கு நல் விருந்தினன் ஆவான்.

7. இனைத்துணைத்து என்பது ஒன்றில்லை விருந்தின்

துணைத்துணை வேள்விப் பயன்.

விருந்தோம்பல் என்னும் வேள்வியின் பயன் இத்தகையது என்று அளவிட முடியாது; அது விருந்தினரின் தகுதிக்கு ஏற்ப அளவினை உடையது.

8. பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி

வேள்வி தலைப்படா தார்.

விருந்தினரை உபசரித்து மனித வேள்வி பயன் அடையாதவர், பொருளை வருந்திக்காத்துப் பின்பு இழந்து வருந்துவர்.

9. உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா

மடமை மடவார்கண் உண்டு.

செல்வநிலையில் உள்ள வறுமை என்பது விருந்தோம்புதலைப் போற்றாத அறியாமையாகும்; அது அறிவிலிகளிடம் உள்ள செயல்.

10.மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து

நோக்கக் குழையும் விருந்து.

அனிச்சப்பூ முகர்ந்த உடன் வாடிவிடும். அதுபோல் முகமலர்ச்சியற்று வேறுபட்டுப் பார்த்தவுடன் விருந்தினர் வாடிவிடுவர்.

**III. இறைமாட்சி**

1. படை,குடி,கூழ், அமைச்சு, நட்பு,அரண், ஆறும்
உடையான் அரசருள் ஏறு.

படை, குடி, செல்வம், அமைச்சு, நட்பு, அரண் என்னும் ஆறு அங்கங்களை உடையவனே அரசருள் ஆண்சிங்கத்தைப் போன்றவன்.

2. அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு.

அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் என்னும் நான்கு குணங்களையும் எப்போதும் பெற்றிருப்பதே அரசனுக்கு இயல்பு.

3. தூங்காமை, கல்வி, துணிவுடைமை இம்மூன்றும்
   நீங்கா நிலனாள் பவர்க்கு.

காலம் தாழ்த்தாமை, கல்வி, துணிவுடைமை என்னும் மூன்றும் நிலத்தை ஆளும் அரசனுக்கு நீங்காமல் நிலைத்திருக்க வேண்டிய குணங்கள் ஆகும்.

4. அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
   மானம் உடைய தரசு.

அறநெறி தவறாது, அறம் அல்லாதவற்றை அகற்றி, வீரத்தில் குறையாத மானத்தை உடையவனே அரசன் ஆவான்.

5. இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்த
   வகுத்தலும் வல்ல தரசு.

பொருள் வரும் வழியை உண்டாக்கலும், வந்த பொருளைச் சேர்த்தலும், அதைப் பிறர் களவாடாமல் காத்தலும், காத்ததைத் திட்டமிட்ட செயலுக்குப் பிரித்து செலவு செய்யும் வல்லமை வாய்ந்தவனே அரசன்.

6. காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
   மீக்கூறும் மன்னன் நிலம்.

அரசன் எல்லோருக்கும் காண்பதற்கு எளியவனாகவும், கடுமையான சொற்களைச் சொல்லாதவனாகவும் இருந்தால், அந்த அரச்னது நாட்டை உலகம் புகழும்.

7. இன்சொலால் ஈத்தளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
   தான்கண் டனைத்திவ் வுலகு.

இனிய சொற்களைச் சொல்லிக் கொடை கொடுத்துக் காக்க வல்ல அர்சனுக்கு, இவ்வுலகம் அவன் விரும்பியபடி நடக்கும்.

8. முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
   இறையென்று வைக்கப் படும்.

அறநெறி தவறாமல் ஆட்சி செய்து, மக்களைக் காக்கும் மன்னன் கடவுள் போல் கருதப்படுவான்.

9. செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
   கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.

குறை கூறுவோரின் சொற்களைச் செவி வெறுக்கும் நிலையில் பொறுத்துக் கொள்ளும் குணம் உடைய அரசனது குடைநிழலில் உலகம் தங்கும்.

10. கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
    உடையானாம் வேந்தர்க் கொளி.

கொடை, கருணை, செங்கோல் ஆட்சி, துன்புற்ற மக்களைக் காத்தல் என்னும் நான்கு குணங்களைக் கொண்டவன், அரசர்களுக்கு எல்லாம் விளக்கு போன்றவன்.

**IV**. **காலமறிதல்**

1. பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
   வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

காகம் தன்னைவிட வலிமையான ஆந்தையைப் பகலில் வென்றுவிடும்.அதுபோல, பகைவரை வெல்ல நினைக்கும் வேந்தன் காலம் வரும் வரை காத்திருக்க வேண்டும்.

2. பருவத்தொடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
   தீராமை ஆர்க்குங் கயிறு.

காலம் தப்பாமல் காரியம் செய்தல், செல்வம் நீங்காமல் நிலைக்குமாறு கட்டும் கயிறு ஆகும்.

3. அருவினை என்ப உளவோ கருவியான்
   காலம் அறிந்து செயின்.

செயலை முடிப்பதற்கு உரிய கருவியையும் காலத்தையும் அறிந்து செய்தால், செய்ய முடியாத செயல்களும் உண்டோ?.

4. ஞாலம் கருதினுங் கைகூடுங் காலம்
   கருதி இடத்தாற் செயின்.

செயலை முடிப்பதற்கு உரிய காலத்தையும் இடத்தையும் அறிந்து செய்தால், உலகையே பெறநினைத்தாலும் முடியும்.

5. காலம் கருதி இருப்பர் கலங்காது
   ஞாலம் கருது பவர்.

உலகை அடைய விரும்புபவர், செயலில் பெருமையை எண்ணிக் கவலையடையாமல் செயலுக்குறிய காலத்தை எதிர்பார்த்துக் காத்திருப்பர்.

6. ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
   தாக்கற்குப் பேருந் தகைத்து.

ஊக்கம் இருந்தும் செயல்படாது ஒடுங்கி இருப்பது ஆட்டுக்கிடாவானது பகைகிடாவை தாக்க பின்னோக்கிச் செல்வது போன்றது.

7. பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்து
   உள்வேர்ப்பர் ஒள்ளி யவர்.

அறிவுடையவர்கள் பகைவரின் கொடுமையைக் கண்டு வெளிப்படையாகக் கோபப்படமாட்டார். அவரை வெல்லும் காலத்தை பார்த்து மனதுக்குள்ளே கோபமடைவர்.

8. செறுநரைக் காணின் சுமக்க இறுவரை
   காணின் கிழக்காம் தலை.

பகைவரைக் கண்டால் பொறுத்துச் செல்ல வேண்டும். அப்பகைவர்க்கு முடிவுகாலம் வந்த போது அவருடைய தலை கீழே விழும்.

9. எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல்.

கிடைத்தற்கரிய காலம் வந்தால் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அப்போதே செய்தற்கரியச் செயல்களைச் செய்ய வேண்டும்.

10. கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து.

பொறுத்திருக்கும் காலத்தில் கொக்குப் போல் அமைதியாக இருக்க வேண்டும். காலம் வாய்த்த போது அதன் குத்து போல் தவறாமல் செய்து முடிக்க வேண்டும்.

**V. நெஞ்சொடு புலத்தல்**

1. அவர்நெஞ்சு அவர்க்காதல் கண்டும் எவன்நெஞ்சே

நீஎமக்கு ஆகா தது.

நெஞ்சமே! அவர் நெஞ்சு அவர்க்கு அடங்கி என்னை நினைக்காதபோது நீ மட்டும் ஏன் எனக்கு அடங்காமல் அவரை நினைக்கிறாய்.

2. உறாஅதவர்க் கண்ட கண்ணும் அவரைச்
செறாஅரெனச் சேறியென் நெஞ்சு.

நெஞ்சே! நம்மிடம் அன்பு இல்லை என்பதைக் கண்டும், அவர் சினம் கொள்ளார் என்று எண்ணி அவரிடமே செல்கிறாயே!

3. கெட்டார்க்கு நட்டார்இல் என்பதோ நெஞ்சேநீ
பெட்டாங்கு அவர்பின் செலல்.

நெஞ்சே! நீ உன் விருப்பத்தின் படியே அவர்பின் செல்வதற்கு காரணம் துன்பத்தால் இருப்பவருக்கு நண்பர் இல்லை எண்பதாலோ!.

4. இனியன்ன நின்னொடு சூழ்வார்யார் நெஞ்சே
துனிசெய்து துவ்வாய்காண் மற்று.

நெஞ்சே! ஊடியபின் கூட நினைக்கமாட்டாய். அதைப்பற்றி இனி உன்னோடு யார் பேசுவார்?.

5. பொறாஅமை அஞ்சும் பெறின்பிரிவு அஞ்சும்
அறாஅ இடும்பைத்தென் நெஞ்சு.

காதலன் வரவில்லையே என்று அஞ்சும்; வந்தால் பிரிந்து விடுவாரோ என்று அஞ்சும். இவ்வாறு என் நெஞ்சு தீராத துன்பம் அடைகிறது.

6. தனியே இருந்து நினைத்தக்கால் என்னைத்
தினிய இருந்ததென் நெஞ்சு.

காதலரை பிரிந்து தனியே இருந்து அவர் தவறுகளை நினைத்தபோது என்நெஞ்சம் என்னைத் தின்பது போல் துன்பம் தரும்.

7. நாணும் மறந்தேன் அவர்மறக் கல்லாஎன்
மாணா மடநெஞ்சிற் பட்டு.

காதலனை மறக்க முடியாத என்னுடைய மடநெஞ்சினோடு சேர்ந்து, நானும் நாணத்தை மறந்தேன்.

8. எள்ளின் இளிவாம்என்று எண்ணி அவர்திறம்
உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு.

உயிர் மேல் காதல் கொண்ட என்நெஞ்சு, காதலரை இகழ்வது இழிவு என்று நினைத்து அவர் உயர்வையே நினைக்கும்.

9. துன்பத்திற்கு யாரோ துணையாவார் தாமுடைய
நெஞ்சம் துணை அல்வழி.

துன்பம் வந்த போது, தம்முடைய நெஞ்சே தமக்கு துணையாகாவிட்டால் வேறு யார் துணை ஆவார்.

10. தஞ்சம் தமரல்லர் ஏதிலார் தாமுடைய
நெஞ்சம் தமரல் வழி.

தமக்குச் சொந்தமான நெஞ்சமே நட்புச் செய்யாத போது, அயலார் பகைவராக இருப்பது எளிதே.

**மாதிரி வினாக்கள்:**

**இரு மதிப்பெண் வினாக்கள் ( பகுதி – அ )**

1. திருக்குறளின் சிறப்பை உணர்த்தும் நூல் எது?
2. எதனைத் தம் பொருள் என்று சான்றோர் கூறுவர்?
3. அமிழ்தினும் இனியது எது?
4. உடலுக்கும், செவிக்கும் இன்பம் தருவது எது?
5. தந்தை மகனுக்கு ஆற்றும் நன்றி யாது?
6. மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி யாது?
7. எது? விரும்பத்தக்கது அன்று?
8. எவன் தேவர்களுக்கு விருந்தினர் ஆவான்?
9. அரசருள் ஏறு போன்றவன் யார்?
10. நிலன் ஆள்பவர்க்கு உரியது எது?
11. அரசர்களுக்கு எல்லாம் விளக்கு போன்றவன் யார்?
12. ஊக்கம் உடையான் ஒடுக்கம் எதனைப் போன்றது?
13. தன் நெஞ்சே தமக்கு துன்பம் தருவதாக தலைவி கூறுவது எதனால்?
14. துன்பத்திற்கு துணையாவது எது?
15. ஞாலம் கருதினும் கைக்கூடும் எப்போது?

**ஐந்து மதிப்பெண் வினாக்கள் ( பகுதி – ஆ )**

1. ‘தந்தை - மகன்' செயல் பற்றி வள்ளுவர் கூறுவதை விளக்குக.
2. விருந்து உபசரிப்பு பற்றி வள்ளுவர் கூறுவது யாது?

3. அரசன் பெற்றிருக்க வேண்டிய குணங்களாக வள்ளுவர் கூறுவதை விளக்குக.
4. காலம் அறிந்து செய்யும் செயல்களாக காலம் அறிதல் என்னும் அதிகாரம் கூறுவதை எழுதுக.
5. தலைவி தன் நெஞ்சை எவ்வாறெல்லாம் தேற்றுகிறாள் என்பதை விளக்குக.

**பத்து மதிப்பெண் வினாக்கள் ( பகுதி – இ )**

1. ‘மக்கட்பேறு’ குறித்து வள்ளுவர் கூறுவதை விளக்கி எழுதுக.
2. விருந்தோம்பலின் சிறப்பினை வள்ளுவர் வழி விளக்குக.
3. அரசனின் இயல்புகளாக ‘ இறைமாட்சி’ என்னும் அதிகாரத்தின் வழி விளக்கி எழுதுக.
4. ‘காலம் அறிதல்’ அதிகாரத்தில் வள்ளுவர் தரும் கருத்துகளைத் தருக.
5. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் குறித்து கட்டுரை எழுதுக.